பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka
# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-2052)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 26 வியாழக்கிழமை (14-06 2001) தொலைபேசி: 3378 ஒலி: 177

★ தாக்குதலில் ஈடுபடுவதில்லை
★ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்து

# அரசின் நிபந்தனைகளை ஏற்றால்
# புலிகள் மீதான தடை நீக்கப்படும்!

## சிரேஷ்ட அமைச்சர் தகவல்

(நமது அரசியல் நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசாங்கம் விதித்துள்ள தடையை யூலை மாதம் முதல் வாரத்தில் நீக்குவதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதியுடன் மிக நெருங்கிய தொடர்புடைய சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**அரசாங்கத்தின் இந் நிலைப்பாடு தொடர்பாக கொழும்பு வந்திருந்த நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் த்ரொப் ஜோன் ஜக்லண்டிடம் ஜனாதிபதி சந்திரிகா சூசகமாகத் தெரிவித்ததாகவும் அந்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மீது ஐக்கியதேசியக் கட்சிகொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு தகுந்த பதிலடி கொடுக்கும் வகையிலும், தமிழ்க்கட்சிகள் ஐக்கிய தேசியக்கட்சிகளின் சதிவலைக்குள் விழாமல் இருப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டும் ஜனாதிபதி புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு உத்தேசித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி சில நிபந்தனையும் விதிக்கவுள்ளதாகவும் அந் நிபந்தனையின் அடிப்படையில் குறிப்பிட்ட கால எல்லையை நிர்ணயித்து செயற்படவுள்ளதாகவும்

(8 ம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் குடிசன மதிப்பீட்டில் அரச அதிகாரிகள் ஈடுபடக்கூடாது!

### புலிகளின் அரசியல்துறை கடிதம்

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டில்! குடிசன மதிப்பீட்டு வேலைத்திட்டங்களில் அரச அதிகாரிகளை ஈடுபடவேண்டாமென கோரும் கடிதங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விடுதலைப்புலிகள் அனுப்பியுள்ளதாக சர்வதேச செய்திஊடகமொன்று நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.

யுத்த அனர்த்தம் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்துள்ள இந்நிலையில் மேற்கொள்ளப்படும் குடிசனமதிப்பீடு, எதிர்காலத்தில் மோசமான விளைவை ஏற்படுத்தும் என்பதால் அந்நடவடிக்கைக்கு யாழ் மாவட்ட அரச அதிகாரிகள் துணை போகக்கூடாதென வலியுறுத்தி விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைமேற்படி கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாக அச் செய்தி ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. [இ-8]

## நெதர்லாந்து குழுவினர் பல்கலை சமூகத்துடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்து தூதரகத்தை சேர்ந்த அதிகாரிகள் குழு நேற்று யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம், யாழ் பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும்சந்தித்து பேசினார்கள்.

இச்சந்திப்பின் போதுபல்கலைக்கழக ஆசிரியசங்கத்தினர் தமிழ்மக்களின் மரபுவழிதாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர்.

இச்சந்திப்பில் பல்கலைக்கழக ஆசிரியசங்கத்தைச்

(8-ம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து தூதுக் குழுவினர் நேற்று யாழ் வந்து சேர்ந்தனர்

### யாழ். செயலகத்தில் விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் உள்ள நெதர்லாந்து தூதரகத்தின் உயர் மட்ட தூதுக்குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

யாழ்ப்பாணம்வந்துசேர்ந்த இத்தூதுக்குழுவினர் யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், திட்டப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் மற்றும் உதவித்திட்டமிடல் அதிகாரி யாழ். மாநகரசபை பொறியியலாளர் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப்பேசினர்.

நெதர்லாந்தில் இருந்து வந்த டெனின்ஈற்றே ஸ்ஹட்டியா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

நெதர்லாந்துத் தூதுக்குழுவினரிடம்யா. போதனாவைத்தியசாலையில் இருந்து கழிவு

(8-ம் பக்கம் பார்க்க)

## 83 யூலைப் படுகொலைகள் விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

### இனவிவகார அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

1983ம் ஆண்டு யூலைக் கலவரம் சம்மந்தமாக ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

1983ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைகளினால் சுமார் 500 முதல் 10 ஆயிரம் வரையான தமிழ்ப்பொது மக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் அவர்களது சொத்துக்களும் சூறையாடப்பட்டது.

இத்தகைய அழிவுகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்திய யூலைக் கலவரத்தில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் இப்படியான சம்பவங்கள் இனிமேலும் தொடராமல் தடுக்கவும் நடவடிக்கை எடுப்பதே இவ்விசாரணைக் குழு அமைக்கப்படுவதன்

(8-ம் பக்கம் பார்க்க)

### மாணவன் தாக்கப்பட்ட சம்பவம்

## சாவ. இந்துக் கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் மத்தியகல்லூரியில் மாலைநேரம் இயங்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் நேற்றைய தினம் தமதுவகுப்புக்களை பகிஸ்கரித்தனர்.

சாவகச்சேரிஇந்துக்கல்லூரி மாணவர்ஒருவர் கடந்ததிங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள சிலகல்லூரிமாணவர்களால தாக்கப்பட்ட சம்பவத்தைகண்டித்தே பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதாக மாணவர்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கையை புலிகளிடம் தாரை வார்க்க எரிக்சோலும், ஜக்லண்டும் பாடுபடுகின்றனர்!

### சிஹலஉறுமயவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் த்ரொப் ஜோன் ஜக்லண்ட் மற்றும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் ஆகிய இருவரும், இலங்கையை விடுதலைப் புலிகளிடம் தாரைவார்த்துக் கொடுக்கவே பாடுபடுகின்றனர்.

இவ்வாறு சிஹல உறுமயக் கட்சித்தலைவர் திலக்கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் உளவாளி தான் எரிக்சோல் ஹெய்ம் என்றுதான் ஆரம்பத்திலேயே கூறிவந்துள்ளதாகவும் அதனை அரசாங்

(8-ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் சூட்டுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி நீராவியடிப் பகுதியில்நேற்றுமாலை 6மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின் போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. (ந)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னிக்கு எரிபொருள்

மலத்தியோன்

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு 18 பரல் டீசல், மற்றும் மண்ணெண்ணெய், 300 பெட்டி மலத்தியோன் ஆகியன நாளை அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அனுமதி அட்டைகள்

அனுப்பி வைப்பு

[கல்வயல்]

இலங்கை தொழில்நுட்ப சேவையில் புகையிரத பாதுகாவலர் பதவி பயிற்சித் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சை இம்மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

[உ-111]

# புலிகளுக்கு உணவு வழங்கியதாக விசாரணை

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளுக்கு உணவு வழங்குவதற்கு உதவியவர்கள் எனச் சந்தேகித்து தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த ஏழு பேரை, திருக்கோயில் அதிரடிப்படை முகாமிற்கு அதிரடிப்படையினர் அழைத்து விசாரணை மேற்கொண்டபின் மேலதிக விசாரணைக்காக அம்பாறை நாசகாரத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். (இ)

# இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் 6 வது இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி மு.ப 10மணிக்கு இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் 300 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

(உ)

# இடம் மாற்றம்

(மந்திகை)

நெல்லியடி தனங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலயத்திற்கு அண்மையில் இயங்கிய தென்மராட்சிப் பிரதேச செயலக அலுவலகம் கடந்த திங்கள் முதல் மாலுசந்திக்கு அண்மையில் உள்ள தனியார் வீடொன்றுக்குஇடம் மாற்றப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (உ-23)

அமரர் பேராசிரியர் துரைராசா பற்றி

# கூட்டத்தில் பேசுவது முக்கியமல்ல அவர் வாழ்க்கை வரலாற்றை நூல் வடிவாக்க வேண்டும்

## நினைவுதினக் கூட்டத்தில் பேராசிரியர் நந்தி எடுத்துரைப்பு

(தென்மராட்சி)

அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகப் பணியாற்றியதன் மூலம் எமது பல்கலைக் கழகத்துக்கு சர்வதேச மதிப்பும், புகழும், பெருமையும் கிடைத்தது. அவரைப் போல எமது பல்கலைக்கழகத்துக்கு உயர் அந்தஸ்தையும் கௌரவத்தையும் தேடித்தந்தவர் இதுவரை யாருமில்லை.

இவ்வாறு வாழ்நாள் பேராசிரியரான செ. சிவஞான சுந்தரம் (நந்தி) நேற்றையதினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட மாணவர் பொது அறையில் கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா ஞாபகார்த்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

பல்கலைக் கழக மாணவர் செல்வன் எஸ். பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமரர் துரைராசாவின் திருவுருவப் படத்துக்கு பேராசிரியர் சிவஞான சுந்தரம், பேராசிரியர் நவரத்தினராசா, வைத்திய கலாநிதி எஸ். சிவராசா ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பேராசிரியர் செ சிவஞான சுந்தரம் (நந்தி) அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது;

அமரர் பேராசிரியர் துரைராசாவைப் பற்றிக் கூட்டத்தில் பேசுவதல்ல முக்கியம். அவர் செய்த சேவையைத் தொடர்ந்து செய்வதுதான் முக்கியம் இவரது வாழ்க்கை உன்னதமானது.

அவர் சாதாரண குடும்பத்தில் பிறந்து நாட்டின் மிக உயர்ந்த பதவிக்கு வந்து இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் கல்விமானாகத் திகழ்ந்தவர். அத்துடன் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த முதல்பத்துப் பேருள் ஒருவராகத் திகழ்பவர்.

அவருடைய வாழ்க்கையைப் பற்றியும், திறமையைப் பற்றியும் ஆற்றல்கள் பற்றியும் இனிப்பிறக்கப் போகும் பிள்ளைகள் அறிய வேண்டும். எனவே அவரைப் பற்றிய சுயசரிதம் ஒன்று அவசியம் வெளியிடப்படல் வேண்டும்.

இங்கிலாந்துதேசத்திலுள்ள நூலகங்களில் 'சுயசரிதங்களைத் தான் பெரும்எண்ணிக்கையானவர்கள் வாசிப்பார்கள். சிறு கதைகளையோ, நாவல்களையோ அல்லது விஞ்ஞான பாடங்களையோ அல்ல.

வாழ்ந்த மனிதர்களைப் பற்றிப் படிப்பது இலக்கியத்திலுள்ள பெரியவர்களைப் படிப்பதிலும் பார்க்க அர்த்தமுண்டு. ஏனெனில் அவர்கள் சமூகத்துடன் வாழ்ந்த பெரியார்கள். சமூகத்துடன் போராடி வாழ்ந்தவர்கள் என்று அறியும் போது நாமும் அதே போலச் செய்யலாம் என்ற எண்ணம், உந்து சக்தி பிறக்கின்றது. அப்படியான மிகவும் உன்னதமானவர் அமரர் துரைராசா மிகவும் உத்தமமானவர் எங்களுக்குக் கிடைத்த மாபெரும் மனிதர் அவர்.

அமரர் துரைராசா உலகிலுள்ள எத்தனையோ பல்கலைக்கழகங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்

அவர் குடா நாட்டுக்கு மட்டும் உரியவர் அல்ல முழுநாட்டுக்குமே உரியவர். தமிழன் தமிழன் என்று பேசுவதில் அர்த்தமில்லை இலங்கையில் எத்தனையோ, பேராசிரியர்கள், பொறியியலாளர்கள் உருவாவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர். பேராசிரியர் துரைராசா இல்லாதிருந்தால் நாம் இந்த நிலைமைக்கு வந்திருக்க முடியாது என இன்றும் பலர் தென்பகுதியில் கூறிக் கொள்கின்றார்கள்.

அமரர் துணைவேந்தராக வந்தது முதல் குடா நாடுமட்டும் என்று சிந்தியாது, குடா நாட்டுக்கு அப்பாலும் சிந்தித்தவர் அதனால் தான்விவசாய பீடம் கிளிநொச்சியிலும் கடல்பீடம் முல்லைத்தீவிலும், பொறியற் பீடம் முறுகண்டியிலும் அமைய வேண்டும் எனஎண்ணினார். உரும்பிராய் பற்றியோ உடுப்பிட்டி பற்றியோ அவர் சிந்திக்கவில்லை.

அமரரின் சுயசரிதத்தை வெளிக் கொணர்கின்ற முயற்சியில் கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் முனைப்புடன் செயற்பட வேண்டும். இதை ஒரு சவாலாக எடுத்து வெளியிட வேண்டும். இது இன்று எமக்குள்ள முக்கிய பெரும் பணி எனக் குறிப்பிட்டார். [உ-77]

# நெதர்லாந்து தூதரகக் குழு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியுடன் சந்திப்பு

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த கொழும்பில் உள்ள நெதர்லாந்து தூதரகத்தின் உயர்மட்டத் தூதுக்குழு மு.ப 10மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் சென்று அதிகாரி என். ஜீவேஸ்வராவிடம் மனித உரிமைகள் யாழ்ப்பாணத்தில் பேணப்படும் விதம், மற்றும் காணாமல் போவோர் தொடர்பாக உரையாடினர்.

இந்தச் சந்திப்பில் தூதரகத்தின் முதலாவதுசெயலாளர் அனிக்கேளம் சுகுந்தர். இரண்டாவதுசெயலாளர் டொறுன் ஈவான் நொறீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காணாமல்போவோர் தொடர்பாக தாம் எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும்தமது செயற்பாடுகள்குறித்துநெதர்லாந்து குழுவினர்க்கு என். ஜீவேஸ்வரா விளக்கமாக எடுத்துரைத்தார். இச்சந்திப்பு சுமார் 1.00மணிநேரம் இடம் பெற்றது. [உ-10]

## இரத்ததானம்

(வடமராட்சி கிழக்கு)

யாழ். பல்கலைக்கழகத்தில் கிளிநொச்சி மாவட்ட ஒன்றிய மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று பேராசிரியர் துரைராசா ஞாபகார்த்தமாக இரத்தானம வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் உட்பட 30 பேர் இரத்ததானம் செய்தனர். (உ-43)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீட வருடாந்தப் பரீட்சைகள் கல்வியாண்டு 1999 - 2000

கலைப்பீடத்தின் பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவர்களிடமிருந்து 29-06-2001 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1) முதலாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை;
2) முதலாம் வருடத்தின் முதலாம் அரையாண்டுப் பரீட்சை (விசேட பரீட்சை)
3) இரண்டாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை
4) இரண்டாம் வருடத்தின் முதலாம் அரையாண்டுப் பரீட்சை (விசேட பரீட்சை)
5) பொதுக்கலைத்தேர்வு பகுதி-II
6) சிறப்புக்கலைத்தேர்வு II, III
7) பொதுக்கலைப் பகுதி I சிறப்புக்கலைப் பகுதி I, மீள் பரீட்சைகள்
8) இரண்டாம் மொழி ஆங்கிலம் மீள்பரீட்சைகள் (Level I, II & III)

மீள்பரீட்சைக்குத்தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 15-06-2001 இலிருந்து கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உதவிப்பதிவாளர்/கலைப்பீடம் அவர்களிடம் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

(கி-2105) பதிவாளர்



அறிவித்தல்

இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக கொடுக்கப்படும் நன்கொடைகள் வைத்தியசாலைப் பணிப்பாளருக்கோ அல்லது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கோ மட்டும் வழங்கப்படுதல் வேண்டும். ஏற்கனவே எவரிடமாவது வைத்தியசாலையின் பெயரில் அன்பளிப்புச் செய்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளாவிடில் உடன் எமது கவனத்திற்குக் கொண்டு வரவும்.

பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(கி/2103)



நல்லூர் பிரதேச சபை

திருநெல்வேலி நவீனசந்தை மேல்மாடிக் கடைகள்

கேள்வி அறிவித்தல்

திருநெல்வேலிச் சந்தை மேல்மாடிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தலின் கால எல்லை கீழ்க் கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான விபரங்களை 24-05-2001ம் திகதிய வலம்புரி, உதயன் பத்திரிகை மூலம் அறிந்து கொள்ளலாம்.

கேள்விப் பத்திர விநியோகம் 22-06-2001 வெள்ளி நண்பகல் 12-00மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி 27-06-2001 புதன் காலை 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம்திறக்கும் திகதி 27-06-2001 புதன் பி.ப 2.00 மணி

மேலதிக விபரங்களை காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. மணிபல்லவராஜன், (ஜே. பி. யு. எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை,

(கி/2104)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான மக்கள் நலன் காக்கும் பிரிவின்புதியநிர்வாக உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் நடை பெற்றது.

தலைவராக வை.செல்லத்துரை,செயலாளராக யோ.தாவீது, பொருளாளராக கோ.சிவசுந்தரமூர்த்தி, உபசெயலாளராக திருமதி இந்திரலீலா,உபதலைவராக வே இராசதுரை ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக நால்வரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## மிதிவெடியில் காலிழப்பு

[யாழ்ப்பாணம்]

அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற மிதி வெடிச்சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தனது வலது காலை இழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தில் குமாரசாமிதுரைராசா [வயது -49] என்பவரே, காலை இழந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-10]

## பெண் தற்கொலை

(கொழும்பு)

காலி நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலின் முன் பாய்ந்து பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மரணமான சுமார் 30வயதுமதிக்கத்தக்க பெண்ணை அடையாளம் காண உதவுமாறு கொள்ளுப்பிட்டி பொலிஸார் அறிவித்துள்ளனர். (உ)

# இன்றைய சூழ்நிலையில் குடிசன மதிப்பீட்டின் உண்மையான இலக்கை அடைய முடியாது

## நிலைமையை விளக்கி ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

குடிசன மதிப்பீடானது தனியே நபர்களை எண்ணும் விடயமல்ல. அதற்கும் மேலாக குடும்ப வசதிகள், வாழ்க்கைத் தரம், வயதுப் பரம்பல், தொழில் போன்ற பல விடயங்களையும் பதிவு செய்யும் பணியாகும். இப்பணி மூலம் காணப்படும் முடிவின் அடிப்படையிலேயே அரசினது எதிர்காலச்செயற்பாடுகள் அமையும்.

இதனால் இன்றைய சூழ்நிலையில் குடிசன மதிப்பீட்டின் உண்மையான நோக்கத்தை கண்டறிய முடியாது.

யாழ் குடாநாட்டில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது உகந்த நடவடிக்கையல்ல என்பதைச் சுட்டிக் காட்டி, இப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

அம் மகஜரிலே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அதில், குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது குறித்து மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களாவன:

இலங்கையின் தேர்தல் முறை விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையிலமைந்துள்ளது. இதன்படி பிரதேச ரீதியில் குடித்தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. ஏற்கனவே நிலவிய பிரதிநிதித்துவத்தை இக் கணக்கெடுப்பு பாதிப்படையச் செய்யலாம்.

அது மட்டுமன்றி பல்கலைக் கழக அனுமதி, வேலை வாய்ப்பு, முதலீட்டுத் திட்டங்கள், நகராக்கங்கள், கீழ்க் கட்டுமான வசதிகள் போன்றவற்றில் பெரும் பாதிப்பை இத்தகைய குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரங்கள் ஏற்படுத்தக் கூடும்.

சாதாரணமாகசன அடர்த்தி குறைந்த பிரதேசங்கள் புறக்கணிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இலங்கையின் அபிவிருத்தியில் பிரதேச ரீதியிலான அகன்று செல்லும் இடைவெளியை இக் கணிப்பீடுகள் ஏற்படுத்திவிடக் கூடும்.

குடிசன மதிப்பீட்டின் போது நியாயமான நம்பகத்தன்மையை நூறு வீதம் எதிர்பார்க்க முடியுமா? என்பது கேள்விக்குறியே. சில வேளைகளில் எழுந்தமான மதிப்பீடுகளுக்கும் குடி மதிப்பீட்டாளர்கள் முகம்கொடுக்க வேண்டியிருக்கலாம். போக்குவரத்து இடைஞ்சல்கள், மற்றும் மிதி வெடிகள், கண்ணி வெடிகள் உள்ள இடங்களுக்கு தூரத்தில் நின்று தான் மதிப்பீடுகள் செய்ய வேண்டி இருக்கும்.

இது ஒரு புறமிருக்க குடியிருப்பாளர்களிடம் இருந்து உண்மையான தகவல்களைப் பெறவும் கடினமானதாகவே இருக்கும்.

அதாவது பெற்ற பிள்ளைகள் எங்குள்ளனர்? என்ன செய்கின்றனர்? எங்கு உறங்குகின்றார்கள்? என்பது சிலருக்கு இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது.

நாம் சற்று வித்தியாசமாக சிந்திப்போமானால் அதாவது குடிப்பரம்பல் குறைந்த இடங்களுக்கு குடிப்பரம்பல் கூடிய இடங்களில் இருந்து ஆட்களை கொண்டு வந்து குடியேற்றுவார்களேயானால் அது இன்னமும் பிரச்சினைகளை பூதாகாரமாக்கிவிடும். இந் நடவடிக்கைகளுக்கும் புள்ளி விபரங்களுக்கும் அதன் கோப்புகளும் துணையாக மாறலாம். ஏனெனில் தேசியம் என்ற சொல்லில் எல்லாமே அடங்குமல்லவா?

எனவேதான் இன்றைய சூழ்நிலையில் குடிசன மதிப்பீட்டை இங்கு மேற்கொள்வது எந்த ரீதியிலும் ஏற்புடையதல்ல என்பதை எந்தவொரு குடிமகனும் உணர்ந்து கொள்வான். ஜனநாயக நாடு ஒன்றில் மக்களின் விருப்பம் அறியப்பட வேண்டியது முக்கியமே. அதன்படியே அரசும் செயற்படல் வேண்டும். (உ)

## யுத்தப் பிரதேசங்களுக்கு பத்திரிகையாளர் சென்றுவர அனுமதிப்பது அரசின் கடமையாகும்

### பத்திரிகையாளரை பாதுகாக்கும் பேரவை சுட்டிக் காட்டுகிறது

(கொழும்பு)

செய்தியூடகங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கியதை வரவேற்று பத்திரிகையாளரைப் பாதுகாக்கும் பேரவை [ஜீ பி ஜே] ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களாவன;

செய்தித்தணிக்கையை நீக்கியதோடு மட்டும் நின்று விடாது, யுத்தப் பிரதேசங்களுக்குப் பத்திரிகையாளர் சென்றுவர அனுமதிக்கவேண்டியதும் அரசினது கடமையாகும்.

சண்டை பற்றி செய்திகள் வெளியிடுவது பெருமளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு செல்ல விரும்பும் செய்தியாளர்கள் உத்தியோக பூர்வ அனுமதியைப் பெற விண்ணப்பிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ள போதிலும் அனுமதி ஒரு போதும்வழங்கப்படவில்லை.

இன்றைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பொதுமக்களின் புரிந்துணர்வும் திறன்களை வளர்ப்பதாயின் சண்டைப் பிரதேச செய்திகள் முழுமையாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தல் அவசியம். (உ)

## மணிசூட்டு வைபவம்

(கோப்பாய்)

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின, உரிமப் பதிவு இரண்டாம் ஆண்டுபூர்த்தியும் 2001/2002ஆண்டுக்கான மணிசூட்டுவைபவமும் 17ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப3.00 மணிக்கு கழகத் தலைவர் லயன் பேராசிரியர் கலாநிதி வ.ஆறுமுகம் தலைமையில் உருமபிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்தியம் 9,10இன் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ் பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக பிராந்தியம் 9இன் தலைவர் லயன் டாக்டர் வை.தியாகராசாவும் கௌரவ விருந்தினராக வலயத்தலைவர்லயன் இ.நடராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ- 79)

# சங்கே முழங்கு

## காலம் கடக்கும் முன்னே கைதூக்கி விடுவீர்களா?

பளை மற்றும் கொடிகாமம், சாவகச்சேரிப் பிரதேசங்களிலிருந்து கடந்த ஆண்டு இடப்பெயர்வடைந்த குடும்பங்களில் அனேகமான மாணவர்கள் தற்போதும் பாடசாலைகளில் இணையாது காலம் கழிப்பது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வீடு, உணவு, உடை, மருந்து, ஒருவரையொருவர் காத்து இருக்க வேண்டிய தேவை என்பன காரணமாக இவர்கள் கடந்த ஓராண்டு காலமாகவே பாடசாலையை நாடவில்லை. தாய், தந்தையர் இழப்பு, பிரிவு, தொழில் இழப்பு காரணங்களால் இவர்களில் பலர் பாடசாலைகளை நினைத்துப் பார்க்க முடியாதவர்களாகி நடுத்தெருவில் நிற்கின்றனர். எதிர்கால சமுதாயத்தில் க.பொ.த. (சா.த) வரை படித்தவர்களுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுமளவுக்கு பெருந்தொகையான மாணவர்கள் கல்வி இடைவிலகல் அடைந்துள்ளனர். அவர்களில் எம்முன் தென்படும் ஒரு சில நூறு குடும்பங்களைச் சேர்ந்த சில ஆயிரம் மாணவர்களையாவது மீண்டும் பாடசாலைகளில் சேர்த்து அவர்களின் எதிர்காலத்துக்கு ஒளியூட்ட தொண்டு நிறுவனங்களாலும் கருணை உள்ளம்படைத்த ஒரு சிலராலும் முடியும் என்றே கருதுகிறேன்.

அவர்களின் கல்வியூக்கம் இன்னும் குன்றிவிடவில்லை. அவர்களின் இடப்பெயர்வுத் தளம்பல் தற்போது ஓரளவாவது நீங்கியுள்ளது. இந்நிலையில் அவ்வாறான மாணவர்களை மீளவும் பாடசாலைகளை நோக்கித் திருப்பி அனுப்பி அவர்களுக்கு நல்வாழ்வு தர ஆசிரியர்கள், அதிபர்கள் கல்வித் திணைக்கள அதிகாரிகள் என்போர் முன்வரவேண்டுமென எதிர்பார்க்கிறேன். இதற்கு அப்படிப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களும நிறைந்த ஒத்துழைப்பை நல்குவார்கள் என்பது நிச்சயம். 'மாணவர்' என்ற அடையாள அட்டையை வைத்துக் கொண்டு பாடசாலை நேரத்தில் வீட்டிலும் வெளியிலும் வெம்பும் ஒரு சில நூறு மாணவர்களுக்கு உதவ எமது சமூகம் நிச்சயம் முன்வரும் என நம்புகிறேன். 1995 இல் இடப்பெயர்வு ஏற்பட்ட போது எத்தனையோ முயற்சிகள் செய்துமாணவர்களின் கல்வித் தரம் நிலை நிறுத்தப்பட்டது. CIDA போன்றநிறுவனங்களின்உதவியாலும் அரசின் முன்னேற்றகரமான ஏற்பாடுகளாலும் அனேக மாணவர்கள் பயனடைந்து இன்றும் உயர்தர வகுப்புகளில் கற்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சி. ஜெயகணேஷன்

## சர்வதேச இந்து குருபீட கட்டடம் அமைக்க 8 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்திற்கு புதியதொரு குருபீட கட்டடம் அமைக்க ரூபா 8 இலட்சம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கீடு செய்துள்ளதாக ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளர் க.நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில், அமைச்சரைச் சர்வதேச இந்துகுருமார் ஒன்றியப்பிரதிநிதிகள் அவரது அலுவலகத்தில் சந்தித்த பொழுது தமக்கு வசதியான குருபீடம் ஒன்று அமைத்துத் தரும்படி வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவ்வேண்டுகோளைஏற்று, யாழ்ப்பாணத்தில் ஓர் இந்து குருமார் குருபீடம் அமைக்க ஏற்பாடு செய்துள்ளார் எனவும் இதற்கென முதற்கட்டத் தொகையாக 8இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து உடன்நிதியினை வழங்க அனுமதியளித்துள்ளதாகவும் க.நிஷாந்தன் தெரிவித்துள்ளார். (உ)

## ஜூலை மாதத்தில் ரணில் தலைமையில் புதிய அரசு அமையும்?

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கம் எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி கவிழும் என்பது உறுதியாகியுள்ளது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்னா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நடைபெற்றஎதிர்ப்புஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அவர் கருத்துத் தெரிவிக்கையில் அரசிற்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆளும் கட்சியிலிருந்து 13 எம்பிக்கள் ஆதரவு அளிக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறப் போதியளவு கையெழுத்துக்களைப் பெற்றுவிட்டதாகவும் ஓகஸ்ட் மாதத்தில் ரணில் விக்கிரமசிங்காவின்தலைமையில் புதிய ஆட்சி அமையவுள்ளது என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (ந-5)

## கடற்படையினர் மீனவர்களை காப்பாற்றினர்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைகடற் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடும் காற்றுக் காரணமாக வள்ளம் கவிழ்ந்ததால் அதிலிருந்து நான்கு மீனவர்களில் ஒருவர் நீந்திக் கரைசேர்ந்தார். ஏனைய மூவரையும் ஊர்காவற்றுறை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 10ந் திகதி நடைபெற்றது. வள்ளம் கவிழ்ந்ததை யடுத்து நீந்திக் கரை சேர்ந்த ஒருவர் கடற்படையினருக்கு தகவல் கொடுத்தார். குறித்த இடத்திற்கு விரைந்த கடற்படையினர் ஏனைய மூவரையும் காப்பாற்றினர். (இ- 10)

# புலமைப் பரிசில் பரீட்சை வினா இல- 20

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

23) அ இளங்கோவன், நெ. மெ. மி. த. க. பாடசாலை
24) இ ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
25) தி கிருபன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
26) சு பிரமிலா, வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம்
27) நா. அனோஜினி, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
28) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
29) யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்
30) வே. விஜிக்குமார், வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
31) ஞா ரகுவர்மன், வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
32) வா. பிரணவன், வல்வை அ. மி. த. க. பாடசாலை
33) ந. சங்கீதா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
34) மு ஆரபி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
35) சி. சிறிரஞ்சன், துன்னாலை மெ. மி த க. பாடசாலை
36) க. நிறோஜினி, யாழ் புனிதமரியாள் வித்தியாலயம்
37) சி, துவாரகன், அல்வாய் சின்னத்தப்பி மகா வித்தியாலயம்
38) பா. சாயிஷங்கர், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
39) அ. விஸ்ணுஜா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
40) ஞா தேனமொழி வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
41) பி மகிந்தன், நெ மெ. மி. த. க பாடசாலை
42) சி கஜாசரன், கொக்குவில் சி சி த க. பாடசாலை
43) செ. தக்ஷாயினி, பெரியபுலம் மகா வித்தியாலயம்
44) கு. ஜெசாமினி, தாவடி இ. த. க. பாடசாலை
45) யோ. தர்சினி, பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி
46) து. ரயூவன், மாகியப்பிட்டி றோ. க. த. க. பாடசாலை
47) லூ எவ்றோய் சுவிஸ்ரன், மாதகல் சென்தோமஸ் றோ. க. த. க. பாடசாலை
48) சி. நிருபா, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி
49) ச நிறோசனா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
50) சு. கோகுலன், புற்றளை மகா வித்தியாலயம்
51) சி தர்சிகா, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
52) சி. கேதினி, கம்பர் மலை அ. த. க. பாடசாலை
53) கா. சுஜன், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
54) இ வினிபிறட்ஸ்ரீபன், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி
55) ப. அபிலாஜினி, யாழ் இந்துஆரம்ப பாடசாலை
56) ம. பேரிஅறபிக்கா, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்
57) ஜெ. ஜோன்சனா, சாவ. இந்துஆரம்ப பாடசாலை
58) த டயானி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
59) மோ. ஜீர்த்தன், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி
60) க. புஸ்பதீபன், சுழிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்
61) ஞா. அன்ரனி இம்மானுவேல், மாதகல் சென்தோமஸ் றோ. க. த. க பாடசாலை
62) தி. அஜந்தா, மாதகல் வி. வ. வித்தியாலயம்
63) சு விம்வக், வல்வை சிவகுருவித்தியாசாலை
64) சு. பிரியந்தினி, யாழ் இந்துமகளிர் ஆரம்பபாடசாலை
65) பூ தர்மஜோதி, கொக்குவில் சி. சி. த. க. பாடசாலை
66) நி டிஜானி, கொக்குவில் சி. சி. த. க பாடசாலை
67) ம. யூடிற்ரா, யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம்
68) ம. மாழினி, வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
69) ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
70) சு. கோகுலன், கரவெட்டி ஞானாசாரியசீர் கல்லூரி
71) வி ஜெயதீபா, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்
72) தே. மாருதி, தேவரையாளி இந்துககல்லூரி
73) பொ. நிரோசா, கரணவாய் மகாவித்தியாலயம்
74) ச. சபேசன், சாவ. இந்து ஆரம்பபாடசாலை
75) சு. தாரணி, மட்டுவில சந்திரமௌலீச வித்தியலயம்
76) பா. நிருபா, சாவ. மகளிர்கல்லூரி
77) யோ. சியாந்தினி, யாழ், இந்துஆரம்ப பாடசாலை
78) வி. கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
79) த. தர்மராஜ், பளை மத்தியகல்லூரி
80) பி. ருசாந்த், யாழ். மத்தியகல்லூரி
81) க. சாயிகேசன், யாழ். சென். ஜோன் பெஸ்கோ
82) ப. தாமரா, யாழ். இந்துஆரம்ப பாடசாலை
83) இ. சிவனேஸ்வரன, வல்வை. சிவகுரு வித்தியாசாலை
84) இ. ரஜீவர்ணன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
85) சி. நவன், துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை
86) ப. கோபிகா, சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
87) ம. ஷாளினி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
88) இ. நிராகுலன், கொக்குவில் இந்துஆரம்ப பாடசாலை
89) ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
90) தெ. பிரணவன், திக்கம் சி. வி. வித்தியாலயம்
91) பெ. கலைவாணி, வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
92) வி. கய்ஷன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
93) அ. அன்ரன் தனேஸ், மாதகல் சென் தோமஸ் றோ. க த க. பாடசாலை
94) ச. கிருஸ்ணவேணன், மீசாலை வி. ம. வித்தியாலயம்
95) செ. நிஷாந்தி. இணுவில் மத்தியகல்லூரி
96) இ. செலவபபிதா, கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
97) உ. விஜீத் யாழ். மத்தியகல்லூரி
98) அ. ரயயா, வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
99) செ. மயூரா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
100) பா. கிருஸ்ணபவான், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
101) பி. ஜெயந்துகா, யாழ். இந்துஆரம்ப பாடசாலை
102) கி. சுஜாதா, தேவரையாளி இந்துக்கல்லூரி
103) தி. தனம்ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
104) ச. மேரிஅமலா, மாதகல் சென்தோமஸ் றோ. க. த. க. பாடசாலை
105) அ. நிருபன், துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை
106) க. கங்ககநேசன், யாழ். இந்துஆரம்ப பாடசாலை
107) ம. சுபாஜினி, யாழ். இந்து ஆரமப பாடசாலை
108) ந. துசிகேதன், யாழ். மததியகல்லூரி
109) க. ஆனந், வண்ணை. நாவலர் மகாவித்தியாலயம்
110) க. சோபனா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
111) கி. நிரோஜினி, வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
112) தெ. கயமஞ்சிதன் யா- புற்றளை மகா வித்தியாலயம்
113) ப. பத்மஜா அல்லாரை அ. த. க. பாடசாலை
114) க சோபிகா யா- அல்லாரை அ. த. க. பாடசாலை
115) த. தமிழினி வட இந்து மகளிர் கல்லூரி
116) கு. வினோஜன் பெரியபுலம் மகாவித்தியாலயம்
117) வி. தமிழ்ச்செல்வி யா- யூனியன்கல்லூரி
118) ம. அனோஜினி யா- தாவடி இ. த. க. பாடசாலை
119) வி. மிதிலா யா- துன்னாலை காசிநாதர்வித்தியாலயம்
120) பு. கயனா அ. மி த. க. பாடசாலை வல்வெட்டித்துறை
121) கி. கருணாநந்தம் யா- தம்பசிட்டி மெ. த. க. பாடசாலை
122) சி. துவாரகன் யா- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
123) ச. மயூரா யா- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
124) ச. சபிந்தன் யா- உ. அ. மி கல்லூரி
125) ச. கிரிசாந்தி சன்மார்க்க விததியாலயம்

# சிறுபான்மைக் கட்சிகளை அடக்க தேசிய அரசு அமைப்பது அவசியம்

### ஐ.தே. கட்சிக்கு அமைச்சர் திஸநாயக்கா அழைப்பு

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைக்க முன்வருமாறு ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சர் எஸ் பி. திஸநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக அமைச்சர் திஸநாயக்கா விடுத்த அழைப்பில்,

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டிணைந்து இருக்கும் மதவாதிகளை தோற்கடித்து, ஒருநிலையான நிர்வாகத்தை ஏற்படுத்துவதுடன் அரசியல் உறுதிப்பாட்டையும் பேணவேண்டியுள்ளது.

அத்துடன் சிறுபான்மைக் கட்சியான முஸ்லிம் காங்கிரசின் அழுத்தங்களுக்கு மத்தியில் எந்த முன்னணிக் கட்சியாலும் முதுகெலும்புடன் ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியாது.

எனவே இப்படியான நெருக்கடியான சூழலைத் தவிர்க்க நாம் ஒன்றுபடுவது மிகவும் அவசியமாகும். தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க இத்தருணத்தில் ஐக்கியதேசியக் கட்சி உதவ வேண்டும் என்றும் கட்சியின் உயர்பீடத்திடம் திஸாநாயக்க கேட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் சிறுபான்மைக்கட்சிகள் நிர்ணயிக்கும் அதிகாரத்தை மட்டுப்படுத்தும் நோக்கிலேயே அமைச்சர் திஸநாயக்க இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை தேர்தலை முன்னதாக நடத்தி உறுதியான அரசொன்றை அமைக்கும் முயற்சியின்ஒரு படிநிலையாகவே மேற்படி கோரிக்கை அமைவதாகவே அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பிரதமர் ரட்ணஸ்ரீ விக்ரமநாயக்கா ஊடாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தேசிய அரசு அமைக்க வருமாறு அழைப்பு விடுத்தமைவாசகர்கள் அறிந்ததே [இ]

## கலைநிலா அரங்கு

[அரியாலை]

திருமறைக் கலாமன்றத்தில் மாதந்தோறும் 'கலைநிலா அரங்கு' நடைபெறவுள்ளது. இம் மாத அரங்கில் நடனம் கிற்றார் இசை நிகழ்வு மற்றும் சிறப்புநிகழ்வாக 'ஏகலைவன்' நாட்டுக் கூத்து என்பன இடம்பெறவுள்ளன. [உ-106]

## போட்டிகள்

[அரியாலை]

திருமறைக் கலாமன்றத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் இலக்கிய மற்றும் பொது அறிவுப் போட்டிகள் நடைபெற இருப்பதால் போட்டியில் பங்குபெற இருப்பவர்கள் தங்கள்பெயர் விபரங்களை மன்றத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அதன் பொதுச் செயலர் கேட்டுள்ளார். [உ-106]

## நிவாரண அனுமதி

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில், இடம்பெயர்ந்தோர், மீனவர், சமுர்த்திநிவாரணம் பெறுவோருக்கான மேமாதத்திற்கான நிவாரண அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். [உ-23]

## இழப்பீட்டு படிவம் விநியோகம்

(மந்திகை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற வணிகர்களுக்கான இழப்பீட்டுப் படிவம் நெல்லியடியில் இயங்கும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் கடந்த செவ்வாய் முதல் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

இப்படிவததினை வணிகர்கள் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (உ-23)

## விநாயகமூர்த்திஎம்.பியுடன் பிரிட்டிஷ் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட் நேற்று முன்தினம் அகிலஇலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் தலைவரும்யாழ் மாவட்ட எம் பியுமான அ. விநாயகமூர்த்தியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பின் போது விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம், அவர்களுடனான பேச்சுவார்த்தைதொடர்பாக விநாயகமூர்த்தி எம். பி. தூதுவர் லிண்டாடபீல்டிடம் எடுத்துக்கூறினார்.

அதேவேளை யாழ். குடாநாட்டு மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய 420 மில்லியன் ரூபா பெறுமதியான 25 மெகவாட்மின் பிறப்பாக்கி தேவையெனவும் அதனை பிரித்தானியா அரசுவழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்கேட்டுக்கொண்டார். (ம)

## இலங்கை மருத்துவர்கள் ஈரோட்டில் கைது

### போலி ஆசாமிகளாம்

(கொழும்பு)

தமிழ்நாடு ஈரோட்டில் மருத்துவமனை நடத்திவந்த இலங்கையைச்சேர்ந்த போலி மருத்துவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தவறான சிகிச்சையால் பாதிக்கப்பட்டவர்கள் கொடுத்த புகாரையடுத்து இவர்களின் வைத்திய நிலையங்களைப் பொலிஸார் முற்றுகையிட்டு,

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட மருந்துகளைப் பறிமுதல் செய்ததோடு, இருவரையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளனர். (உ)

## மேயக் கட்டிய ஆட்டின் தலையை வெட்டிய கள்வர்

(கோப்பாய்)

புல்மேய்வதற்காக வெற்றுக்காணியில் கட்டி விடப்பட்ட ஆட்டை, வெட்டி எடுத்துச் சென்ற சம்பவம் அண்மையில் கோப்பாய் கிழவானை ஒழுங்கைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காலையில் மேய்வதற்காக கட்டிய ஆட்டின் சொந்தக்காரர் மதியம் அங்கு போய் உடலைபார்த்தபோது அதன் தலையை மட்டுமே அங்கு கண்டு அதிர்ச்சியடைந்தாராம். [உ-79]

## கால் நடை அலுவலகம் கோப்பாயில்

[கோப்பாய்]

சாவகச்சேரி அரச கால் நடை அலுவலகம் இப்போது கோப்பாயில், பருத்தித்துறை வீதியில் நாவலர் வித்தியாலயதுக்கு முன்பாக அமைந்துள்ள தனியார் கடைக் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது; [உ-79]

## அரசசெலவில் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 7 ஆம் திகதி கிளாலிக் கடற் பகுதியில் மிதந்து வந்ததாகக்கூறப்பட்டு, கொடிகாமம்பொலிஸாரினால்யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டிருந்த ஆணின் சடலம் நேற்றுமுன்தினம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி சடலம் வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்ட வேளையில் அடையாளம் காண முடியாதவாறு ஊதிப் பருத்த நிலையில் காணப்பட்டது

எவரும் அடையாளம் காட்டி பொறுப்பு ஏற்காத காரணத்தினால் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (உ-10)

# யுத்த நடவடிக்கை காரணமாக 106 முன்பள்ளிகள் செயலிழப்பு

### 140 ஆசிரியர்கள் வேலையை இழந்து தவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின்படி 12 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இயங்கி வருகின்ற 495 முன்பள்ளிகளில் 11 ஆயிரத்து 981 சிறார்கள் கல்வி பயில்வதகாக் கணக்கிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மேற்படி முன்பள்ளிகளில் 705 ஆசிரியைகள் கற்பிப்பதற்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

தென்மராட்சியில் 80 முன்பள்ளிகளும் பச்சிலைப்பள்ளியில் 14, மருதங்கேணியில் 12 எல்லாமாக 106 முன்பள்ளிகள் யுத்த நடவடிக்கைகள் மற்றும் இடப்பெயர்வுகளால் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இயங்காமல் உள்ளதால் 140 முன்பள்ளி ஆசிரியைகள் தமது வேலையை இழந்துள்ளனர்.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளினால் பொறுப்பேற்கப்பட்ட முன்பள்ளிகளில் 96 ஆசிரியைகளுக்கான கொடுப்பனவுகளை அந்தந்தப் பிரதேச சபைகள் மாதாந்தம் வழங்கி வருகின்றன;

இவற்றுள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையே ஆகக் கூடுதலான முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றமையும்,

வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் 13 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு யாழ். மாவட்டத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளமையும் கணக்கெடுப்பு மூலம் தெரிய வந்துள்ளது. (உ-77)

## இன்று ஒரு தகவல்

### இறக்கு முன் ஈகை செய்!

ஓர் ஊரில் செல்வன ஒருவன் இருந்தான். அவனுக்குக் குழந்தைகள் இல்லை. இருந்தாலும் அவன் பெரிய கருமியாக இருந்தான். யாருக்கும் எதுவும் தர அவனுக்கு மனம் வருவதில்லை. ஊர் மக்கள் எல்லாரும் அவனைக் குறை கூறிவந்தார்கள். துறவி ஒருவரிடம் ஒரு நாள் அந்தக் கருமி சென்றான். 'ஐயா! நான் இறந்தபிறகுஎன் சொத்துக்கள் அனைத்தும் தர்மத்திற்குத்தான்செல்லப்போகின்றன. ஆனால் ஊர் மக்கள் என்னைப் பாவி என்று திட்டுகிறார்கள். ஏன் என்றுதெரியவில்லையே?' என்று கேட்டான்.

அதற்குத் துறவி 'அப்படியா? ஒரு சமயம் பசு மாட்டிற்கும்,பன்றிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலைஉனக்குச் சொல்கிறேன். உனக்கே உண்மை விளங்கும் என்று கூறினார்துறவி. சொல்லுங்கள் என்றான் கருமி.

ஒரு சமயம் பன்றி ஒன்று மாட்டைப் பார்த்து 'மக்கள் எல்லோரும் உன்னைப் பற்றியும் உன் இனிய இயல்புகளைப் பற்றியும் புகழ்ந்து பேசுகிறார்கள். அதுவும் உண்மைதான். நீ அவர்களுக்காக பால் கொடுக்கின்றாய். ஆனால் நானே உன்னை விட அதிகம் கொடுக்கிறேன். என் இறைச்சியை மக்கள் உண்ணப் போகிறார்கள். என் தொடைக் கறியைச் சுவைக்கப் போகிறார்கள். என் பாதங்களைக் கூடமென்று தின்னப் போகிறார்கள். என் உடலின் எந்தப் பகுதியையும் அவர்கள் விட்டு வைக்கப் போவதில்லை. நான் என்னையே முழுமையாகத் தரப் போகிறேன். இருந்தாலும் மக்கள் என்னைப்பாராட்டாமல் இகழ்கிறார்களே. இதன் காரணம் என்ன? என்று வருத்தத்துடன் கேட்டது:

இதைக் கேட்ட மாடு சிறிது நேரம் சிந்தித்தது. பிறகு பன்றியைப் பார்த்து 'நான்உயிருடன் இருக்கும் போதே மக்களுக்குப் பயன்படுகிறேன் அதனால் தான் எல்லோரும் என்னைப் புகழ்கிறார்கள் என்று பதில் சொன்னது என்றுமுடித்தார் துறவி. கருமி உண்மையை உணர்ந்தான். தான் உயிருடன் இருக்கும் போதே மக்களுக்கு வாரி வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்றான்.

பேராசிரியர் எ. சோதி.

## இராசி பலன்

14-06-2001
(வைகாசி 31, வியாழன்)
அட்டமி மு இ 7 33 வரை
பூரட்டாதி பி.ப 1.12 வரை
இராகுகாலம் 1.23- 2.53
நல்லநேரம் 7.23- 8.53
சித்தம்.

**மேஷம்**
காரிய தாமதம், நித்திரைக் குறைவு, உணர்ச்சிவசப்படல், தனவிரயம்.

**இடபம்**
நண்பர்கள் உதவி, பெருமை, பொருள் வரவு, காரியம் கைகூடும்.

**மிதுனம்**
முயற்சி கைகூடும், தொழில் நன்மை, சுபநிகழ்ச்சி, போசன சுகம்.

**கடகம்**
அச்சமான நிலை, வியாதி, அவமானம், எதிர்பாராத நன்மை.

**சிங்கம்**
வீண் தொல்லை, உடல் சோர்வு, முயற்சி தடங்கல், அரச நன்மை.

**கன்னி**
சுவாரஸ்யம், நினைத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், வாகன வசதி,

**துலாம்**
சந்தோசமான சம்பவம், வியாதி குணமடைதல், பகைவரால நனமை, முயற்சி விருத்தி.

**விருச்சிகம்**
தாழ்வு நிலை, புத்திரரால் கவலை, காரிய தாமதம், வியாதி.

**தனுசு**
ஆரோக்கியக் குறைவு, உறவினா மனஸ்தாபம, முயற்சி கைகூடும், நிலைக்கேடு.

**மகரம்**
இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, காரிய நனமை, சகோதரர் உதவி.

**கும்பம்**
தனவிரயம், வாக்குவாதம், கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

**மீனம்**
செல்வாக்கு, ஆழ்ந்த சிந்தை, நல்ல உணவுகிடைத்தல், அமைதி நிலை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

### திருடர்களால் தாக்கப்பட்டவர்

## அறிவிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீட்டில் இருந்தவர்களை கடுமையாகத் தாக்கி விட்டு, அங்கிருந்த சொத்துக்களைச் சூறையாடிச் சென்ற சம்பவம் அண்மையில் உரும்பிராய் வடக்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இரவுவேளை வீட்டில் புகுந்த திருட்டுக் கும்பலின் இத் தாக்குதலால் சின்னத்தம்பி ஜெகநாதராசா(வயது-65)என்பவர் அறிவிழந்த நிலையிலும், மனைவியான ஓய்வு பெற்ற ஆசிரியை ஜெ.செல்வராணி[வயது-58] தலைப் பகுதியில் பலத்த காயமடைந்த நிலையிலும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-104)

## பிச்சை கேட்டுச்செல்வோர் வீடுகளில் கைவரிசை

(ஈச்சமோட்டை)

பிச்சை கேட்டுச் செல்வது போல் வீடுகளுக்குச் சென்று வீட்டிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்களைத் திருடிச் செல்லும் திருட்டுக் கும்பலொன்று யாழ். நகரில் திரிகின்றது.

வீட்டிற்குச் சென்று அனுதாபத்தைப் பெறும் வகையில் பேசி, வீட்டார் ஏதாவது உதவி செய்வதற்காக உள்ளே சென்றதும் அங்குள்ள பெறுமதி வாய்ந்த பொருட்களைத் திருடிச் செல்கின்றனர். (உ-59)

## ரொனி பிளயருக்கு ஜனாதிபதி வாழ்த்து

[கொழும்பு]

மீண்டும் பிரிட்டிஷ் பிரதமராகத் தெரிவாகியிருக்கும் ரொனி பிளயருக்கு இலங்கை ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அவர் மீண்டும் தெரிவாகி இருப்பது அவரது தலைமைத்துவத்தில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை காட்டுகிறதென்றும் எதிர்காலத்தில் பிளயருடன் நெருங்கி ஒத்துழைத்து பணியாற்ற தான் காத்திருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது (உ-8)

## ம.வி.மு. தலைமையில் அரசியல் கட்சிகளின் கூட்டணிஅமைப்பு விரைவில்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி தலைமையில் அரசியற் கட்சிகளின் கூட்டணியொன்று உருவாகவுள்ளது.

ஞாயிறன்று கொழும்பு நிப்போன் ஹோட்டலில் இதற்கான இரண்டாம் சுற்றுப் பேச்சுகள் நடந்துள்ளன; இணையப் போகும் சகல கட்சிகளும் ஒரு கூட்டு ஒப்பந்த வாசகத்தை யூன் நடுப் பகுதிக்குள் தயாரித்து விடும் என்று மக்கள் விடுதலை முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் முயற்சி ஒரு வெற்றியென அதன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்;

இக் கூட்டத்திற்கு இடதுசாரி ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்காரவும், ஜாதிக ஜனதா பக்சய வின் பிரதிநிதியொருவரும் வேறும் உயர் பணியாளர்கள் சிலரும் சமுகமளித்திருந்தனர்;

நாடு இன்று எதிர் கொண்டுள்ள நெருக்கடிகளுக்கான தீர்வுகள் விரிவாக ஆராயப்பட்டு இவ்வமைப்பினால் முன்னெடுக்கப்படும் என வீரவன்ச தெரிவித்துள்ளார்.

(உ)

## வாகரைக்கு விஜயம்

(மட்டகளப்பு)

விடுதலைப்புலிகளின்கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்துக்கு. நேற்று உலகவங்கிப் பிரதிநிதிகள் குழு விஜயம் செய்தது.

உலகவங்கியின் நிதிப்பங்களிப்பில் அங்கு புனரமைக்கப்படும் கடடுமுறிவு மற்றும் மருதங்கேணி குளங்களைப் பார்வையிடும் பொருட்டே இக்குழு அங்கு சென்றுள்ளது.

இக்குழுவுடன் மட்டக்களப்பு அரச அதிபர், வாகரைப் பிரதேச செயலர் ஆகியோரும் சென்றுள்ளனர்.

(இ-05)

## செய்தித் துளிகள்

### நாடக களப்பயிற்சி

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆரம்பக்கல்வி நாடகக் களப்பயிற்சி செயலமர்வு வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 8.30 முதல 3.30 மணிவரை நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

நிகழ்வில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் களப்பயிற்சிககு வசதியாக தளர்வான மாற்றுடை மதியபோசனம் என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(உ-23)

### விண்ணப்பம் கோரப்படுகிறது

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புமற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தகவல் தொழில நுட்பப் பூங்காவிற்கு கணனித துறையில்திறமையும் அனுபவமும் உடையவர்களிடமிருந்து பல்வேறுபதவிகளுக்கு ஆட்சேர்க்கும் முகமாக விணணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(உ-106)

### கைதி தப்பினார்

(வவுனியா)

வவுனியா மாவட்ட நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்ட கைதி ஒருவர் நீதிமன்றக்கட்டடத்தில வைக்கப்பட்டிருந்தபோது தப்பியோடியுள்ளார்.

மகாரம்பைக்குளத்தைச் சேர்ந்த வி. சண்முகநாதன் (வயது-39) என்பவரே தப்பியோடியவராவார்; (வ)

### 10 ஆயிரம் பேரை படைக்கு சேர்க்க முயற்சி

இராணுவத்தின் படைப் பலத்தை அதிகரிக்கும் நோக்கில் பத்தாயிரம்பேரைத்திரட்டும் முயற்சி அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளது.

இதற்காக 21 மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைநிலையங்கள் அமைக்கப்படவுள்ளன

[ந-05]

### திருமலையில் கூட்டம்

(திருமலை)

வடக்குகிழக்கு மாகாணத்தில்உள்ள வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கானஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக் கிழமையும் நாளை வெளளிக் கிழமையும் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குமாகாணக் கல்விஅமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமை வகிக்கவுள்ளார். [வ]

### சிறுவர்நாடக போட்டிமுடிவு

(கோபபாய்)

அண்மையில் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற யாழ். வலயப் பாடசாலைகட்கிடையேயான சிறுவர் நாடகப் போட்டியில் யாழ் திருக்குடும்பக் கன்னியா மடமஆரமபப்பிரிவு சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆரம்பப் பிரிவு, யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப்பிரிவு ஆகியன முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன. (உ-79)

### நிர்வாகசபை கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் தேவஸ்தானத்தின் மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-104)

### பொங்கல் விழா

(ஏழாலை)

மல்லாகம் கோணாப்புலம் ஞானவைரர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகி விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும் (உ-12)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

## ★ பார்வையற்றவர் படைத்த சாதனை

இது வரை காலமும் எத்தனையோ பேர் எவறெஸ்ற் உச்சியை தொட்டுள்ளார்கள். ஆனால் முற்றாக பார்வை இழந்த ஒருவர் 29,035 அடி உயரத்தை கடந்து எவறெஸ்ற் உச்சியை அடைந்தார் எனும் போது ஆச்சரியம் தோன்ற வில்லையா?

13 பேரடங்கிய குழு ஒன்றுடன் தனது சாதனைப் பயணத்தை ஆரம்பித்த எரிக் என்பவர் தனது 13 ஆவது வயதில் முற்றாகப் பார்வையை இழந்தவர் ஆவார். மலை உச்சியை அடைந்து விட்டேன் என்று மற்றவர்கள் சொன்ன போது எனது கண்ணில் இருந்து கண்ணீர் கொட்டியது என்று தனது வெற்றிக்களிப்பை நெகிழ்வுடன் விபரிக்கும் எரிக்கிடம் இன்னுமொரு ஆச்சரியமான சேதி இருக்கிறது.

இவர் தனது காதலியை 13 ஆயிரம் அடி உயரமான 'கிளி மஞ்ஜாரோ' மலை உச்சியில் கரம் பற்றினார்

## ★ திறப்புக் கோர்வையில் துப்பாக்கி

உலகை அழிப்பதற்கு எத்தனையோ விதமான குண்டுகள், வெடிபொருட்கள், துப்பாக்கிகள் என்று அன்றாடம் கண்டு பிடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த வரிசையில் அண்மையில் சந்தைக்கு வந்தது தான் திறப்புக் கோர்வை துப்பாக்கி.

மூன்றே அங்குலமான இந் நுண்ணிய துப்பாக்கி 6 தோட்டாக்கள் மட்டுமே கொள்ளக் கூடியது. இதன் சிறப்பென்ன வென்றால் சுட்டதும் சுடப்பட்டவர் எந்த வித கூக்குரலும் இல்லாமல் உடனே மயங்கி விழுந்து இறந்து விடுவாராம். இதன் தோட்டா உடலில் தங்காது துளைத்துக் கொண்டு வெளியேறும் வேகம் கொண்டது. ரஷ்யத் தயாரிப்பான இத் துப்பாக்கியில் இன்னும் ஆபத்துக்கள் அதிகரிக்கும் என்று தான் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

அவதானி

# ஒக்லஹோமா குண்டுவெடிப்பு சூத்திரதாரி மக்வேயின் மரணதண்டனைக்கு உலக அரங்கில் கடும் எதிர்ப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் ஒக்லஹோமா குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான திமோதி மக்வேயிற்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து அமெரிக்கா மற்றும் உலகின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன

இதனையடுத்து இண்டியானா நகரில் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட வேளை மேலும் பலர் சிறைச்சாலைகளிற்கு முன்பாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் தாக்கம் தற்போதும் தொடர்ந்த வண்ணம் இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவதினத்தன்று கடைகள், பாடசாலைகள் அரச கூட்டுத்தாபனங்கள் என்பன மூடப்பட்டு இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஒக்லஹோமா குண்டு வெடிப்பின் சூத்திரதாரி திமோதி மக்வேயிற்கு மரண தண்டனை நிறைவேற்றிய அமெரிக்காவின் செயலுக்கு சர்வதேச அளவிலும் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. [உ-9]

# ரொறன்ரோவில் இல. தூதுவர் அலுவலகம் உ. தமிழர் இயக்கம் எதிர்ப்பு

(ரொறன்ரோ)

கனடாவின் ரொறன்ரோ மாநிலத்தில் இலங்கையின் தூதுவர் அலுவலகம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தூதரகம் தலைநகர் ஒட்டாவாவில் இருப்பதால் ரொறன்ரோவிலுள்ள பெருமளவு தமிழர்களான இலங்கையர், ஐந்து மணித்தியாலங்கள் பிரயாணம் செய்தே அங்கு சென்று தமது அலுவல்களை கவனிக்கவேண்டியிருந்தது.

இனிமேல் கடவுச்சீட்டு, அறிமுக அட்டை, விசா, ஓய்வூதியம் போன்ற தேவைகளை ரொறன்ரோ அலுவலகத்தில் செய்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கனடாவில் இயங்கும் உலகத் தமிழர் இயக்கம் இது தமிழருக்கெதிரான இலங்கையரசின் நடவடிக்கை என விமர்சித்ததுடன் தமிழர்கள் இதனை பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் கோரியுள்ளது. (உ)

# வாஜ்பாயின் உடல்நிலை தேறிவருகிறது

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் முழங்காலில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையையடுத்து அவரது உடல்நிலை சீராகி வருவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நியூயோர்க்கில் வசிக்கும் இந்தியச் சத்திரசிகிச்சை நிபுணர் சித்தாரஞ்சன் ரணாவத்தினால் கடந்தவாரம் பிரதமரின் வலது முழங்காலில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

இதனையடுத்து அவரது உடல்நிலை திருப்திகரமான முறையில் தேறிவருவதாக வைத்தியர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். (உ-9)

# இறுதி உணவாக ஐஸ்கிறீம் கோரிய மக்வே

(வாஷிங்டன்)

அமெரிக்கா ஒக்லஹோமா குண்டு வெடிப்பின் சூத்திரதாரி திமோதிமக்றீவேய் தனது கடைசி உணவாக ஒரு லீட்டர் ஐஸ்கிரீமை கோட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை நிறைவேற்றப்படும் முன்னர் சிறை அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் திமோதியை கடைசியாக உண்ணவிரும்பும் உணவு பற்றிக் கேட்ட போதே திமோதி மக்வே ஒரு லீட்டர் ஐஸ்கிறீமைக் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

மரண தண்டனை நிறைவேற்றப்படும் கடைசி நிமிடம் வரை மக்வே சந்தோஷமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

# படைகளின் முற்றுகை முடிவுக்கு வந்தது

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீரில் பகுதி ஒன்றில் புகுந்திருந்த தீவிரவாதிகளில் மூன்றுபேரை இந்திய இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதையடுத்து இந்தியப்படைகள் மேற்கொண்டிருந்த முப்பத்திரெண்டு மணிநேர முற்றுகை முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த ஞாயிறன்று இந்திய இராணுவ அதிகாரி ஒருவரை சுட்டுவிட்டு தீவிரவாதிகள் பகுதிக்குள் புகுந்துகொண்டனர்.

இதனை அடுத்து, பகுதியை சுற்றிவளைத்துக் கொண்ட இராணுவத்தினர், பகுதிக்குச் செல்லும் தண்ணீர், மின்சார விநியோகங்களை துண்டித்ததை அடுத்து தீவிரவாதிகளுக்கும் படைகளுக்கும் இடையில் கடும் துப்பாக்கிப் பிரயோகம் ஆரம்பித்தது.

இந்தச் சண்டைகளில் நேற்று முன்தினம் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன், பின்னர் மீதமிருந்த மூன்று பேரும் நேற்றுக் கொல்லப்பட்டனர்.

இந்த மோதல்களில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. (உ-8)

## உலக தரிசனம்

# 9 ஆசியர் கனடாவில் சிறைப் பிடிப்பு

(ரொறன்ரோ)

சட்டவிரோதமாகக்குடியேறியவர்கள் என்று கருதப்படுகின்ற 9 ஆசிய வாசிகளை, கனேடியகுடிவரவுத்துறை அதிகாரிகள வன் கூவர் தீவில் கைது செய்து தடுத்து வைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுளளது.

கைது செய்யப்பட்ட 9 பேரும ஆண்களாவர்.

இவர்கள 100 அடி நீளமான மீன்பிடிப்படகில் சட்டவிரோதமாக கனடாவிற்குள் நுழைய முற்பட்டதாகவும், மீட்புக் பணிகளுக்கான இணைப்புக் காரியாலயங்களுக்குகிடைத்த தகவல்களை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட 9 பேரும் விசாரணைகளுக்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (உ-9)

# சிறுவயதுடைய போராளிகள் 59 பேர் தீவிரவாதிகளால் விடுதலை

(பிறீடவுண்)

சியாராலியோனின் புரட்சிகர தீவிரவாதிகள் 9 முதல் 17 வயதுடைய மற்றொரு தொகுதி சிறுவர்களை விடுதலைசெய்துளளனர்.

இதேவேளை 2 சிறுமிகள் உட்பட 59 பேரை கடந்த வாரம் மேற்படி போராளிகள் அமைப்பு விடுதலை செய்ததை ஐ. நா. சமாதானப் படையின் பேச்சாளர் உறுதி செய்துள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட குறைந்த வயதுடைய இப் போராளிகள் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிப்படைந்தவர்களாக உள்ளதாக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்திற்குள் மாத்திரம் 828 சிறு போராளிகளை இத் தீவிரவாத அமைப்பு விடுதலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# பயணிகள் படகு நீருள் மூழ்கியது 40 பேர் காணாமல் போயினர்

## மடகஸ்காரில் சம்பவம்

[லண்டன்]

மடகஸ்காரில் படகு ஒன்று நீரில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த கால்பந்தாட்டக் குழு உட்பட 40 பேர் காணாமல போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தில் மூழ்கிய இந்தப் படகில் பயணம் செய்தவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

கால நிலைசீர்கேடு காரணமாகவே இப்படகு நீரில் மூழ்கியிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப் படகில் 16 கால்பந்தாட்ட வீரர்களும் 11 பயணிகளும் 13 பணியாளர்களும் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 40 பேரினதும் நிலை என்ன வென்று இது வரை அறிய முடியாதிருப்பதாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். [உ-9]

# இந்தியப் பொலிஸார் தடியடி

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில உள்ள புனித ஸ்தலமான ஷரரி செரிபில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைக்க இந்தியப் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியுள்ளதுடன் தடியடிப் பிரயோகமும் மேற்கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

# ஹெலிவிபத்தில் 9 பேர் பலி

(தெஹ்ரான்)

கடந்த வாரம் நடைபெற்ற ஈரான் தேர்தலில் வாக்களித்து முடிந்ததும் வாக்குப்பெட்டிகளைச் சுமந்து சென்ற ஈரானிய ஹெலி ஹொப்ரர் ஒன்று நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக நொறுங்கி வீழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் மேற்படி விபத்துக்குள்ளான ஹெலியில் பயணம் செய்த 9 பேரும் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துத்தொடர்பான விசாரணைகளை ஈரானியப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-9)

# இந்தோனேஷிய அமைச்சரவையில் விரைவில் புதிய மாற்றங்கள் ஏற்படும்

(ஜகார்த்தா)

பலத்த அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் இந்தோனேஷிய ஜனாதிபதி அப்துல்ரஹ்மான் வாஹிட் இன்னும் ஓரிரு தினங்களில் தனது மந்திரிசபை மாற்றம் குறித்து அறிவிப்பார் என்று இந்தோனேஷிய அரச வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதியின் மிக நெருங்கிய நண்பரும், வெளிவிவகார அமைச்சருமான அல்வ் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்தசில தினங்களில் மட்டும் இந்தோனேஷிய ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட் ஆறு அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வாஹிட்டிற்கு இந்தோனேஷியாவில் பலத்த அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன் அவரது ஜனாதிபதிப் பதவி ஸ்திரமற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ-9)

ஒருவனுக்கு அழிவு தருவது குற்றமாதலால் அது தன்னிடம் வராது தடுக்க வேண்டும்

குறள்

# வலம்புரி

## எதிரிக்குச் சகுனமல்லோ

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவருவதற்கான அனைத்து பூர்வாங்க ஏற்பாடுகளும் முடிவடைந்து விட்டது.

இந் நிலையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வருமாறு அமைச்சர் திஸநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரியுள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைக்கவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அமைச்சர் அதற்காகக் கூறிய காரணம் என்னவெனில் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினரின் கொட்டத்தை, அதிகாரத்தை அடக்க வேண்டுமென்பதாகும்.

இது காறும் சிறுபான்மைக் கட்சிகளைக் 'காவாங்காகக்' கொண்டு பொது ஜன ஐக்கிய முன்னணியின் 'வெளி வீதி வலம்' நடந்தது. இப்போது முஸ்லிம் காங்கிரஸ் சில வேளைகளில் சறுக்கி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினர் 'காவாங்குகளாக' இருக்க வேண்டுமேயொழிய வாகனத்தில் ஏறி எழுந்தருளி சுவாமிகளாகவோ அல்லது பிரதம குருவாகவோ இருக்கக் கூடாது என்பதில் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தெளிவாக இருக்கின்றன. 'மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக இருக்கட்டும்' என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே தேசிய அரசு அமைப்பதற்கான அழைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் தமிழர்களுக்கு 'எதிர்க்கட்சித் தலைவர்' என்ற அந்தஸ்து கிடைக்கவே விடக்கூடாது என்ற கொள்கையில் முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஜே. ஆர். ஜெயவர்த்தனா திட்டம்வகுத்தார்.

அத் திட்டமே 1978இல் கொண்டுவரப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகும். இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம் எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பு இலங்கையின் வரலாற்றில் தமிழர்க்கு ஒரு தடவை மட்டுமே என்பது உறுதிபாகிவிட்டது

அன்று தமிழர்களின் கரம் ஓங்கும் நிலையில் அதனை ஜே. ஆர். மட்டம் தட்ட. இன்று முஸ்லிம்களின் கரம் ஒரு படி உயர அதனை பொ. ஐ. முன்னணி மட்டம் தட்ட முயல்கிறது.

---

## மறைந்தார் மாண்பு

# அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா

# ஆற்றிய சேவைகள் அளவிடற்கரியனவாகும்

அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் கல்விசார் உலகத்துக்கும் ஆற்றிய சேவையை நாடு நன்கறியும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புகழ் பூத்த துணைவேந்தராக அவர் கருதப்படுகின்றார்.

கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியலில் பீடாதிபதிப் பதவியை விட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சேவை செய்ய வந்தார். அவர் பதவி ஏற்கும் போது இந்திய சமாதானப்படை இங்கு வந்திருந்தது. பல பிரச்சினைகளை எதிர் நோக்கிய காலம். இந்நிலையில் அவர் துணிந்து பதவியேற்றார். நெல்லியடியில் இருந்து சாதாரண சைக்கிளில் வந்துபோய்க் கடமையாற்றினர். இதன் காரணமாகத்தான் விரைவில் நோய்வாய்ப்பட்டார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பொறியியல் பேராசிரியராகவும் அப்பீடத்தின் பீடாதிபதியாகவும் அதன் பின் திறந்த பல்கலைக்கழகத்திலும் கடமையாற்றினார். அவருடைய கல்விசார் தகைமை மிக ஆழமானது. கலாநிதிப் பட்டத்துக்கு அவர் மேற்கொண்ட ஆய்வு அவருக்கு தேசிய ரீதியில் மட்டுமல்லாமல் உலகப் பல்கலைக்கழகங்களினாலும் காத்திரமாக மதிக்கப்பட்டது: இன்றும் மதிக்கப்படுகிறது.

I. P. K. F. வுடன் ஒரு சுமூக உறவை ஏற்படுத்தி நிர்வாகத்தில்கவனம் செலுத்தினார். பல்கலைக்கழகத்தில் விவசாயபீடம் ஒன்றினை உருவாக்கி கிளிநொச்சியில் இயங்க வைத்தார். அங்கும் சைக்கிளிலேயே சென்று வந்தார்: பொறியியல்பீடம் ஒன்றினை முறிகண்டியில் உருவாக்க ஆரம்ப முயற்சிகள் எடுத்தார். பொறியியல் பீடத்துக்கென ஒரு பொறியியல் பேராசிரியரை நியமித்தார். மேலும் மீன்பிடியியல் பீடத்தினை முல்லைத்தீவில் உருவாக்க முயற்சிகள் எடுத்தார். ஆயினும் நாட்டு நிலைமை காரணமாக உருப்படாமல் போய் விட்டன. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஆராய்ச்சிகளுக்கென நிதி ஒதுக்கி செயற்பட ஒரு சபையை நிறுவினார். இன்று வரை பெரும்பாலான ஆசிரியர்கள் இதனால் பலன் பெறுகிறார்கள். ஆசிரியர்களின் நூல்களை பல்கலைக்கழகம் பொறுப்பேற்று வெளியிட வைத்தார். இதனால் ஒரு

**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**
கலைப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சில ஆசிரியர்கள் காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டனர். இவர்களில் பலர் அவரை மறந்து விட்டார்கள் என்றே கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கென அவர் மிகவும் யோசித்து நிதானமாக ஒரு முக்கியமான பணியை ஆரம்பித்து வைத்தார். அதுதான் துணைவேந்தர் நல நிதியம். தன்னோடு படித்தவர்கள், தன்னிடம் படித்தவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருக்கு நேரிலும் கடிதமூலமும் பத்திரிகை மூலமும் தனது திட்டத்தை தெரிவித்தார். வெளிநாட்டில் இருந்து பணம் வந்து சேர ஆரம்பித்தது. வறிய மாணவர்களுக்கு நிதியுதவி கொடுக்க ஆரம்பித்தார். அப்போதைய சிரேஷ்ட மாணவ ஆலோசகர்தான் வறிய மாணவர்களை அடையாளப்படுத்திக் கொடுப்பார். ஆயினும் அவருக்கு ஒரு கவலையிருந்தது. உண்மையாக வறிய மாணவர்களுக்கு இந்த உதவி போய்க் கிடைக்கிறதா? என்பதுதான். இன்று துணைவேந்தர் நல நிதியம் பல இலட்ச ரூபாயைப் பெற்று வருகிறது. மாணவர்களுக்கு கொடுத்து வருகிறது.

அரச சார்பற்ற நிறுவனங்களைக் கொண்டு போர்க் காலத்தில் ஒரு மாணவர்க்கு 500 ரூபா வீதம் பெற வைத்தார். மாணவர்களுக்கு சேட்டுக்களும், சேலைகளும் பெற வைத்தார்: அப்போது எரிபொருள் கிடைக்காத நேரம். மண்ணெண்ணெய் குறிப்பிட்ட அளவு வீதம் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டது மாணவர்கள் இரவில் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு டீசல் ஜெனரேற்றர்கள் பாவிக்கவும் வசதி செய்தார். இதனால் தான் அவர் அமரராகிய போது கதறாத மாணவர்கள் இல்லையென்று கூறலாம்.

பொருளாதார ரீதியில் நாம் வாழும் பிரதேசத்துக்கு திட்டங்களைஎழுத்து வடிவில் உருவாக்கினார். மூலவளம், அபிவிருத்திக்கான வாய்ப்பு, வாய்ப்பீனம் ஆகியவை விவசாயம் நிலப்பயன்பாடு, மீன்பிடித்துறை, போக்குவரத்து, கட்டட நிர்மாணம் கிராம நகர அமைப்பு பற்றிய கலந்துரையாடல்கள் மாதம் தோறும் பல்கலைக்கழக சபாமண்டபத்திலும் நடைபெற்று அறிக்கை ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவருடைய காலத்தில் பல்கலைக்கழகமும் சமூகமும் ஒன்றிணைந்தது குறிப்பிடத்தக்கதாகும். பல்கலைக்கழகத்தில் ஒரு மக்கள் வங்கிக் கிளையை செயற்பட வைத்ததும்: இராமநாதன் நுண்கலைக்கழகம் வளர்ந்து இந் நிலைக்கு வரவும் அவர்தான் காரணம்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் மரணமடைய முன் அடிக்கடி சொல்லுவார். தான் விரைவில் இறக்கப் போவது நிச்சயம் என்று. அப்படியே இறந்து விட்டார். பல்கலைக்கழக சமூகம் அவர் இறக்கும் போது துணைவேந்தராக இல்லாது விட்டதாலும் பதவிக்காலம் முடிய முன்னே இராஜினாமாச் செய்துவிட்டாலும் துக்கிற்று நின்றது ஆறு வருடங்கள் இருதடவை துணைவேந்தராக இருந்து சேவையாற்றிய பேராசிரியர் துரைராசாவின் நினைவுப் பேருரை பல்கலைக்கழகம் யூன், 11 ஆம் திகதி நடத்த நடவடிக்கை எடுத்த போதும் இம்முறை நிறைவேற்ற முடியவில்லை. மொறட்டுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் நினைவுரையை நிகழ்த்த சம்மதம் தெரிவித்த போதும் அவரால் யாழ்ப்பாணம் வர முடியாதிருந்தது. அடுத்த வருடத்தில் இருந்து கட்டாயமாக யூன் 11 ஆம் திகதி நினைவுரை நடந்தே தீரும்.

வளர்க பேராசிரியர் துரைராசா புகழ்

---

### சிறுவன் மரணம்

[யாழ்ப்பாணம்]

திடீரெனஏற்பட்ட காக்கை வலிப்புக் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கோப்பாயைச் சேர்ந்த விக்னேஸ்வரன் பிரதீபன்[ வயது 15] எனும் சிறுவன் மரணமானான். [உ-104]

---

## சாயி அருளமுதம்



உங்கள் உடலையும் உள்ளத்தையும் புனிதமாக்குங்கள் இந்த இடம். உடைந்த கார்களைப் பழுதுபார்த்து முழுமையாக்கும் தொழிற்சாலை போன்றது. கெட்ட எண்ணங்களுக்கு இடமளித்துத் தீய செயல்களைச் செய்யாதீர்கள். வாழ்க்கை பரிசுத்தமானதும் புனிதமானதுமாகும். மகிழ்ச்சியுடனும். ஆனந்தத்துடனும் அதனூடாகப் பிரயாணம் செய்யுங்கள். சோகமான மகிழ்ச்சியற்ற முகத்தைக் கொண்டிருக்காதீர்கள். சந்தோஷமென்பது கடவுளுடன் ஒன்றிணைதலாகும். உங்கள் வாழ்நாளில் இந்தக் காலகட்டம் பரிசுத்தமானது. இந்த வயதில் மகிழ்ச்சியைப் பெற்று ஆனந்தத்துடனிருக்க உங்களால் முடியாது போனால், வயோதிபராகும் போது நீங்கள் எப்படி மகிழ்ச்சியுடனிருக்க முடியும்? இப்பொழுது உங்களைத் தாங்கிச் செல்லஇரண்டு கால்களேயுள்ளன. சுதந்திரமாக நீங்கள் துள்ளித் திரிய முடியும் ஆனால் உங்களுக்குத் திருமணமாகி ஒருகுடும்பத்தை நிர்வகிக்கும் போது பல கால்கள் கொண்ட அட்டை போல ஊர்ந்து செல்வீர்கள்!

-நன்றி-
நாளாந்த நற்சிந்தனை

---

## சென்ஜோன்ஸ் தினம் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சென்- ஜோன்ஸ் அம்புலன்ஸ் தினத்தினை முன்னிட்டு இப் படைப்பிரிவின் கொழும்புத்தலைமையகம்பிரகடனப்படுத்தியுள்ள சென்- ஜோன்ஸ் தினம் எதிர்வரும் 21. 22, 23, 24 ஆம் திகதிகளில் மாவட்டங்கள் தோறும் கொண்டாடப்படவுள்ளது.

சென்- ஜோன்ஸ் தினத்தினை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலும் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. முதலுதவிப் போட்டி, இரத்த தானம், முதலுதவி நாடகங்கள், சிரமதானம், மரம் நடுகை மரதன் ஓட்டம், அணி நடைப் போட்டி என்பன இடம் பெறவுள்ளதாக தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-104)

### விளையாட்டுப் போட்டி

[மன்னார்]

மன்னார் மாவட்ட வீரர்களையும் வீராங்கனைகளையும் ஊக்குவிக்கும் வகையில் தியாகிகள் தினத்தையொட்டி இம் மாதம் 6 ஆம்திகதி முதல் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாகவும்,

தியாகிகள் தினமான 29 ஆம் திகதி விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும் எனவும்ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஸ் அணியினர் தெரிவித்துள்ளனர். [உ]

---

### திருவிழா

(அரியாலை)

வண்ணார் பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர் வரும் 18, 19, 20 ஆம் திகதிகளில் முறையே சப்பறம், தேர், தீர்த்தத் திருவிழாக்கள் நடைபெறும்; (உ-10)

### இனிய வாழ்வு இல்லம் திறப்பு

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் இனிய வாழ்வு இல்ல மாணவர் விடுதியொன்று நேற்று முன் தினம் இல்லத் தலைவர் க. விநாயகமூர்த்தியினால் திறந்து வைக்கப்பட்டது.

மனிதநேய நம்பிக்கை நிதியம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் இம் மாணவர் விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் முல்லை மாவட்ட காவல் துறைப் பணிமனைப் பொறுப்பாளர் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

சிறப்புரையை விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் பாலகுமாரன் ஆற்றினார்; (இ)

# சொந்த இடத்தில் பணிபுரியும் டாக்டர்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்க முடியாது!

## சுகாதார அமைச்சர் செனிவிரத்தினா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குகிழக்கு மகாணங்களில் கடமைபுரியும்அரச வைத்தியர்களின் பிரச்சினை தொடர்பாகஇன்றுகூடவுள்ள அமைச்சரவையில் முடிவுகள்எடுக்கப்படும்எனசுகாதார அமைச்சர் டபிளயு டி.ஜே செனிவிரத்தினா தெரிவித்துள்ளார்

அமைச்சர் செனிவிரத்தினா தனது இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று கொழும்பு வந்துசேர்ந்துள்ளார்.

அமைச்சருடன் மட்டக்களப்புமாவட்ட எம்பிக்களான ஜோசப் பரராசசிங்கம் பொன்செல்வராசா ஆகியோர் தொலைபேசியில் தொடர்புகொண்டு வைத்தியர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக கேட்டபோதே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் வடக்கு கிழக்குமாகாணங்களைசொந்த மாவட்டங்களைக் கொண்ட வைத்தியர்கள் மனிதாபிமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் சிங்களடாக்டர்கள் தமது சொந்த இடங்களைவிட்டு வெளிமாவட்டங்களில் கடமையாற்றத் தூண்டும்வகையிலேயே அவர்களுக்கு விசேடகொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இந்நிலையில்சொந்தமாவட்டங்களில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கமுடியாதுஎனினும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தான் இதுபற்றிமுடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் செனவிரத்தினா கூறினார்.

இதேவேளைடாக்டர்களின் வேலைநிறுத்தம் இன்றும் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# புலிகள் மீதானதடையை நீக்கி அரசு அவர்களுடன் பேச வேண்டும்

## அமெ.குழுவிடம் மாவை எம்.பி தெரிவிப்பு

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் அரசு பேசவேண்டும் என்பதே தமிழ்மக்களின் இன்றைய எதிர்பார்ப்பாகும். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட எம்.பி மாவை சேனாதிராசா அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச ரீதியிலான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும்திட்டத்தைச்சேர்ந்த மூன்று அதிகாரிகளை கொழும்பில் சந்தித்து பேசியபோது கூறியுள்ளார்.

அண்மையில் கொழும்பு வந்தஅமெரிக்க ஹாவாய் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த சர்வதேசரீதியிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பிரதி திட்டப் பணிப்பாளர் கலாநிதியோபித்கிக் கலாநிதி வில்லியம் வெஸ்பேர்க், கலாநிதிஹிமேலி பிலிப் ஆகிய மூவருடனுமே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு வந்த இக் குழுவினரிடம் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்திருப்பதாவது.

தமிழ்மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டமையினால், தமிழ்த் தலைவர்களினால் சாத்வீகப்போராட்டம், மற்றும்பேச்சுவார்த்தைகள் மூலமும் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாமல் போய்விட்டது.

இதனால் ஆயுதப்போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையேற்பட்டது என்றார்.

இச்சந்திப்பின்போது யாழ். மேயர் ரவிராஜ், யாழ் மாநகரசபை உறுப்பினர் அரவிந்தன் ஆகியோர் உடனிருந்தார்கள் இக் குழுவினர் ஏனைய தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்கள். (வ)

# தேசிய அரசை அமைப்பதற்கு ஐ.தே. கட்சியில் ஒருசாரார் விருப்பம்

## ரணில் பிரதமராகும்வாய்ப்பும் உண்டாம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருசாரார் விருப்பம்கொண்டுள்ளனர்.

தேசிய அரசு அமைக்க வருமாறு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஐக்கிய தேசியக் கட்சிக்கு விடுத்த அழைப்பை உதாசீனம் செய்யகூடாதென ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நிரோன்பெர்ணான்டோ கூறியுள்ளார்.

தேசிய அரசொன்று அமைந்தால் ஐக்கிய தேசியக் கட்சி விரும்பும் நான்கு சுதந்திர ஆணைக்குழுக்களை அமைக்க வழிசெய்யுமென்றுஐ தேகட்சியின் மற்றொரு எம்.பி கருத்துத் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசொன்று அமையுமானால் உப ஜனாதிபதி பதவியொன்று உருவாக்கப்பட்டு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, உப ஜனாதிபதி அரச அதிகாரங்களுடன் பிரதமர் பதவியில் ரணில் விக்கிரமசிங்கவும் அமர்த்தப்படலாம் என்று ஊகங்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை ஐ.தே.கவின் துணைத்தலைவர் காமினி அத்துக்கோறளை கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஒரு பகுதி எம்.பிக்கள் எம்முடன் சேர்ந்தால் தேசிய அரசு அமைக்கமுடிமென்று குறிப்பிட்டுள்ளார். [இ]

### நெதர்லாந்து

நிரைகடலுக்கு அசர்ருவதற்குரிய யந்திரமொன்றை தந்துதவுமாறுபேலதிஅரசஅதிபர் து.வைத்திலிங்கம் கேட்டுள்ளார்.

நெதர்லாந்து தூதுக்குழுவினர் குடாநாட்டு மக்களின் தேவைகள், அவர்களின் குறைநிறைகள் குறித்தும்விசாரித்து அறிந்துகொண்டனர். [வ]

### நெதர்லாந்து குழு

சேர்ந்த க. தேவராஜா பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், பேராசிரியர் சிற்றம்பலம், நாச்சியார் செல்வநாயகம் பேராசிரியர் இருஷ்ணராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை யாழ் பல்கலைக்கழகமாணவர்ஒன்றியத்தலைகர்எஸ்: கஜேந்திரன்உபதலைவர் எம்.கோபாலகிருஷ்ணன் செயலர்எம்: சுகுனேஸ்வரன் ரி.தர்மினி மற்றும் பிரதிநிதிகள்கலந்துகொண்டனர் (வ)

### அரசின்...

தெரிய வருகிறது.

விடுதலைப்புலிகள் எதிர்வரும் காலங்களில் தீவிரவாத நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுவதில்லை என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சமாதானப்பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க முன்வருவதென்றும் இணங்கினால் புலிகள் மீதான தடை நீக்கப்படுமென அரசு நிபந்தனை விதித்துள்ளது.

இந்த நிபந்தனைகளில் பிரகாரம் விடுதலைப் புலிகள் தீவிரவாதத்தைக் கைவிட்டு சமாதானப் பேச்சிற்கு முன்வருவார்களானால் இனப்பிரச்சினைக்கு நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் தீர்வு காண முடியும்

விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசு நீக்க முன்வந்திருப்பதனால் தமிழ்க்கட்சிகள் தம் நிலைப்பாட்டை இறுதிநேரத்தில் மாற்றி நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தில் அரசுக்குச் சாதகமாக நடந்து கொள்வார்களென அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி காலக்கெடுவுடன் கூடிய பேச்சு வார்த்தையை நடத்துமென கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலவகையாகப் பேசப்படுகிறது.

இதேவேளைஇந்நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நோர்வே அமைச்சர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேசுவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. [வ]

### 83 யூலைப்...

நோக்கமென்று தெரிவிக்கப்படுகிறது.

18வருட காலமாக நடைபெற்றுவரும் போருக்கும் அப்போர் ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்தது 83 யூலை கலவரமே என்பதால் அதனைவிசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்படுபடுவது அவசியமென்றும் அக்குழுவுக்குத் தலைவராக ஒய்வுபெற்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்படுவார் எனவும் இனவிவகார அமைச்சர் அத்தாவுட செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

இவ்விசாரணைக் குழு. 'தென்னாபிரிக்க நம்பிக்கை மற்றும் மறுஉகன் ஆணைக்குழு' மாதிரியே ஏற்படுத்தபபடுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
அர்ஜுன், அபிதா
பிரகாஷ்ராஜ்
நடித்த
**வானவில்**
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30[பு நே]
(3222)

## மரண அறிவித்தல்

### யோசப் ஆசீர்வாதம்

கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோசப் ஆசீர்வாதம் 13-06-2001 புதன்கிழமை அவரது இல்லத்தில் காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்றவர்களான யோசப் மரியையின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான தொம்மை மரியையின் மருமகனும், காலம் சென்ற லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்றவர்களான செபமாலை மற்றும் அலெக்சாண்டர், லூர்த்தம்மா, புலோமினம்மா, கர்த்தரினம்மா ஆகியோரின் சகோதரனும், சூசைப்பிள்ளை, செல்வராசா) ராஜேஸ்வரி மரியநாயகம் (பிரான்ஸ்) விக்ரோரியா பாக்யநாதன் (பிரான்ஸ்) அமிர்தநாயகம்[பிரான்ஸ்] ஆகியோரின் பாசமிகு தந்தையும். அன்னமேரி, கொன்சேக்கா, வஸ்தியாம்பிள்ளை மேரிசிசீலியா [பிரான்ஸ்] தேவராசா ஜெடசீலி [பிரான்ஸ்] பற்றிமா நேசம ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 14-06-2001 இன்று4மணிக்குகிரிப்பள்ளி சேமைக்காலை மயானத்தில் நல்லடக்கம்செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சூசைப்பிள்ளை (செல்வராசா)
[மகன்]
யாழ் பருத்தித்துறை வீதி,
நெலலியடி,
கரவெடடி.
[கி-2106]

### இலங்கையை

கம் இப்போது நன்கறிந்துள்ளது,

தற்போது சமாதான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் ஜேன் ஐக்லண்டும் எரிக்சோலுக்குச் சளைத்தவரல்ல அவரும் விடுதலைப்புலிகளின் உளவாளியே. இதனாலேயே நோர்வேயின் மத்தியஸ்தத்தை விடுதலைப் புலிகள் ஆதரிக்கின்றனர்

எரிக்சோல் ஹெய்மின் உண்மையான சொரூபத்தை அரசாங்கம்இப்போது புரிந்துகொண்டது எனவே சமாதானப் பேச்சை நிறுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்தி அவர்களைஅழிக்க வேண்டுமென்பதே தமது கட்சியின்நிலைப்பாடென்றும் திலக் கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளார். [இ]

# அல்லைப்பிட்டியில் பயணியை தவறவிட்ட பஸ் திருப்பி அனுப்பப்பட்டது

(ஊர்காவற்றுறை)

அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் பயணி ஒருவரை தவறவிட்டுச்சென்ற பஸ்ஸை மண்கும்பானில்வைத்து கடற்படையினர் திருப்பி அனுப்பினர்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை நோக்கி சென்றபஸ்வண்டி அல்லைப்பிட்டிசோதனைச் சாவடியில் பயணிகளை இறக்கிவிட்டு சோதனை முடிந்தபின்பு பயணிகளை ஏற்றிச்சென்ற போதிலும் ஒருபயணி தவறவிடப் பட்டுவிட்டார்.

இதனை அவதானித்த அல்லைப்பிட்டியிலுள்ளபடையினர் கொடுத்த தகவலையடுத்து மண்கும்பானில்வைத்து பஸ்வண்டி திருப்பப்பட்டு குறித்தபயணி ஏற்றிச்செல்லப் பட்டார். [ந-5-75]

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விளையாட்டு அவை நடாத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான தாச்சிச்சுற்றுப் போட்டியில்இன்று யாழ். பல்கலைக்கழக அணியும், வசந்தசிறி அணியும் மோதவுள்ளன. (வ)

### சாவகச்சேரி

மாணவர்தாக்கப்பட்டசம்பவத்துடன் தொடர்புடைய மூன்று கோரிக்கைகளை தாம் முன்வைத்துள்ளதாகவும் மாணவப்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றுபகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவப் பிரதிநிதிகளை அழைத்து கல்லூரிஅதிபர் விசாரணை நடத்தினார். [ந-15]

இப பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல, 15, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.